# ஓசியா

# புத்தகக் குறிப்பு

- அதிகாரங்கள் - 14
- 12 சிறு தீர்க்கதரிசன புத்தகங்களுள் ,முதல் புத்தகம்.
- இஸ்ரவேலின் வட இராஜ்யத்துக்கு உரைக்கப்பட்டது.
- புத்தகத்தின் சுருக்கம்
  - ஜனங்களின் விசுவாசமற்ற தன்மை,பாவம்
  - துரோகத்திற்கு எச்சரிக்கை.
  - மன்னிப்பு
  - கிறிஸ்து மற்றும் கடைசி நாட்கள் குறித்தான தீர்க்கதரிசனங்கள்
- நோக்கம் ::
  - இஸ்ரவேல் ஜனங்களின்  பாவத்தைக் கண்டிக்கவும், அவர்களைத் தம்மிடம் திரும்ப அழைக்கவும் எழுதப்பட்டது..
- ஓசியாவை ஒரு இல்லற வாழ்க்கையை ஏற்படுத்தும்படியாகக் கட்டளையிட்ட கர்த்தர் , அதன் மூலம் தாம்  இஸ்ரேலுடன்  கொண்டுள்ள உறவை வெளிப்படுத்துகிறார்.
- புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனப் புத்தகங்களில் ஒன்று ஓசியா.

Sword of the Spirit

# ஆசிரியர் குறிப்பு

- ஆசிரியர் - ஓசியா
- ஓசியா - (பொருள்) - இரட்சிப்பு
- ஓசியாவின் தகப்பன் - பெயேரி
- தீர்க்கதரிசனம் உரைத்தக் காலம் - கி.மு 755 - 710
- <u>ஓசியாவின் காலத்தில் அரசாண்ட ராஜாக்கள்:</u>
  - யூதாவின் ராஜாக்கள்(தெற்கு இராஜ்யம்) - உசியா , யோதாம் , ஆகாஸ் , எசேக்கியா
  - இஸ்ரவேலின் ராஜா(வடக்கு இராஜ்யம்) - யெரொபெயாம்,சகரியா,சல்லூம், மெனாகேம்,பெக்காகியா,பெக்கா,ஓசெயா
- <u>ஓசியாவின் காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள்:</u>
  - ஆமோஸ், ஏசாயா, மீகா
- யெரொபெயாம் II ராஜாவின் ஆட்சிக் காலத்தில் கர்த்தர் ஓசியாவை இஸ்ரவேலுக்கு அனுப்பினார். அவர்களின் விக்கிரக வழிபாட்டையும், புறஜாதியினரை சார்ந்திருப்பதையும் அவர்களுக்கு சுட்டிக்காட்டி கண்டிக்கிறார்.

Sword of the Spirit

# வரலாற்றுப் பிண்ணனி

யெரொபெயாம் II - இன்  ஆட்சியின் பிற்பகுதி செழிப்பைக் கொண்டுவந்தாலும் நான்கு ராஜாக்கள் ஒரே ஆண்டில் ஆட்சி செய்ததால் , அது குழப்பத்துடன் முடிந்தது.
( யெரொபெயாம் (II), சகரியா, சல்லூம் மற்றும் மெனாகேம்)

1. மெனாகேமின் ஆட்சி காலத்தில் பூல் என்னும் அசீரிய ராஜா தேசத்துக்கு விரோதமாய் வந்தான்.(2 இரா 15:19)

2. பெக்காவின் நாட்களில் அசீரிய ராஜாவாகிய திகிலாத்-பிலேசர் வந்து குடிகளை சிறையாக அசீரியாவுக்கு கொண்டுபோனான். (2 இரா 15:29)

3. ஓசெயா (*இஸ்ரவேலுடைய வடராஜ்யத்தின் கடைசி ராஜா*) ராஜாவுக்கு விரோதமாய் அசீரியாவின் ராஜாவாகிய சல்மனாசார் வந்தான்.
(2 இரா17:3) , கி.மு 722

4. தீர்க்கதரிசி ஓசியா சமாரியா எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்திலும், யெரொபெயாம்(II) இன் ஆட்சியின் முடிவிலும், சகரியா, சல்லூம், மெனாகேம், பெக்காகியா, பெக்கா மற்றும் ஓசெயா ஆகியோரின் ஆட்சிகாலத்திலும் தனது ஊழியத்தைத் தொடங்கியிருக்கலாம்:

Sword of the Spirit

# அதிகாரங்கள்
(1 - 3)

# சோரம்போன மனைவி (கோமர்) , உண்மையுள்ள புருஷன் (ஓசியா)

Sword of the Spirit

# அதி . 1:1- 2:1 >> தேசம் கர்த்தரை விட்டு விலகி சோரம் போயிற்று

ஓசியாவின் தீர்க்கதரிசனத்தின் போது, இரண்டாம் யெரொபெயாம் ராஜா இஸ்ரேலை ஆண்டு வந்தான். அவன் இஸ்ரேலின் வரலாற்றில் மிக மோசமான ராஜாக்களில் ஒருவன். விக்கிரக வழிபாட்டை தேசத்தில் கொண்டு வந்தான்,ஜனங்கள் தவறான வழிகளில் செல்ல காரணமானான் . அவர்கள் கர்த்தரை தேடுவதை விட்டு அவருக்கு தூரமானார்கள்.

- தேசம் சோரம்போயிற்றென்று காண்பிக்கும் வண்ணமாக கர்த்தர் ஓசியாவை ஒரு சோரஸ்திரீயைச் சேர்த்துக் கொள்ளச் சொல்கிறார்.(2)
- ஓசியா கோமேரைச் சேர்த்துக் கொண்டான். அவள் கர்ப்பந்தரித்து பிள்ளைகளைப் பெற்றாள்.
    - ***யெஸ்ரயேல்(குமாரன்) - இஸ்ரவேல் வம்சத்தாரின் ராஜ்யபாரத்தை ஒழியப்பண்ணுவேன்.(4)***
    - ***லோருகாமா (குமாரத்தி) - இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கஞ்ச் செய்வதில்லை. நான் அவர்களை முழுவதும் அகற்றிவிடுவேன்.(6)***
    - ***லோகம்மீ(குமாரன்) - நீங்கள் என் ஜனமல்ல , நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை.(9)***
- இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனாலும் ,அவர் தம்முடைய ஜனத்தின் மேல் வைத்த அன்பினிமித்தம் ((இயேசு கிறிஸ்துவினால்) மறுபடியும் அவர்களை சேர்த்துக் கொள்வார்.(1:10 -2:1)
- ***ஒரே அதிபதி (11) - இயேசு கிறிஸ்து***

# அதி . 2 >> பாகாலி --------------->> ஈஷி

- **புருஷனுக்கு துரோகஞ் செய்த மனைவி. பிற நேசர்கள் . (2,5,8)**

  *8. தனக்கு நான் தானியத்தையும் திராட்சரசத்தையும் எண்ணெயையும் கொடுத்தவரென்றும், தனக்கு நான் வெள்ளியையும் பொன்னையும் பெருகப்பண்ணினவரென்றும் அவள் அறியாமற்போனாள்; அவைகளை அவர்கள் பாகாலுடையதாக்கினார்கள்.*

- **எச்சரிப்பு & கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. (2 - 4,6,9 - 13)**
  - *....அவள் தன் வேசித்தனங்களைத் தன் முகத்தினின்றும், தன் விபச்சாரங்களைத் தன் ஸ்தனங்களின் நடுவினின்றும் விலக்கிப்போடக்கடவள்.(2)*
  - *இல்லாவிட்டால் நான் அவளை நிர்வாணமாக உரிந்து, அவள் பிறந்தநாளில் இருந்தவண்ணமாக அவளை நிறுத்தி, அவளை அந்தரவெளியைப்போலாக்கி, அவளை வறண்டபூமியைப்போல் விட்டு, அவளைத் தாகத்தால் சாகப்பண்ணுவேன்.;(3)*
  - *அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப்பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, தன் நேசரைப் பின்தொடர்ந்து, என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன்....(13)*

- **கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள்.(14 - 23)**
  - *லோகம்மீ ------>> அம்மீ ( **நீ என் ஜனம்**) , லோருகாமா -------->> ருகாமா (**இரக்கஞ் செய்வேன்**)*
  - *எனக்கு மனைவியல்ல ---------->> நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன் (2,19)*

# அதி . 3 >> அநேக நாள் எனக்காகக் காத்திரு, உனக்காக நானும் காத்திருப்பேன்

- தீர்க்கதரிசி ஒரு புதிய ஒப்பந்தத்தில் நுழைகிறார்.

  ***இஸ்ரவேல் புத்திரர்பேரில் கர்த்தர் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக நீ இன்னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும், விபசாரியுமான ஒரு ஸ்திரீயை நேசித்துக்கொள் என்று சொன்னார்.(1)***

- கர்த்தர் ஒரு புதிய உடன்படிக்கையின் கீழ் தம் ஜனத்தை மீண்டும் மீட்டெடுக்கும் அன்பை அது குறிக்கிறது.

  ***அப்பொழுது நான் அவளை எனக்குப் பதினைந்து வெள்ளிக்காசுக்கும், ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்கும் கொண்டு,(2)***

  ***அவளை நோக்கி: நீ வேசித்தனம்பண்ணாமலும், ஒருவனையும் சேராமலும் அநேகநாள் எனக்காகக் காத்திரு; உனக்காக நானும் காத்திருப்பேன் என்றேன்.(3)***

- **கடைசி நாட்களில் நிறைவேறும் தீர்க்கதரிசன வார்த்தை..**

  ராஜாவாகிய தாவீதின் குமாரனாகிய இயேசுவை , ஜனங்கள்  மேசியா என்று அறிந்து கொள்ளுவார்கள். அவர்கள் கர்த்தரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவார்கள்.

  ***இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், ....இருப்பார்கள்.(4)***

  ***பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசிநாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்.(5)***

Sword of the Spirit

# அதிகாரங்கள்
# ( 4 - 14 )
# சோரம்போன ஜனம் , உண்மையுள்ள தேவன்

Sword of the Spirit

Sword of the Spirit

அதிகாரங்கள்
(4:1 - 8:14)

# தேவன் பரிசுத்தர்

Sword of the Spirit

# அதி. 4 >> தேசத்துக்குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது

## தேசம் புலம்புவதற்கான காரணம் ::

- **தேசம்**
  - உண்மை இல்லை
  - இரக்கம் இல்லை
  - தேவனைப்பற்றிய அறிவு இல்லை
  - கீழ்படிதலில்லை(12)
  - விக்கிரக வழிபாடு (13,17)
  - உணர்வில்லாதவர்கள் (14)
  - அடங்காதவர்கள் (16)
- **ஆசாரியர்கள்**
  - அறிவை வெறுத்து , தேவனை மறந்தார்கள் (6)
  - எவ்வளவாய்ப் பெருகினார்களோ அவ்வளவாய் பாவஞ்செய்தார்கள் (7)
  - ஜனங்களின் (காணிக்கை - பலி - ஆசாரியனின் பங்கு ) அக்கிரமத்தின் பேரில் பசிதாகமாயிருந்தார்கள் (8)
  - கர்த்தரை மதிக்கவில்லை (10)
- **அதிபதிகள்**
  - தாருங்களென்று இலச்சையானதை நாடினார்கள் (18)

# அதி. 5 >> கர்த்தர் இஸ்ரவேலையும், யூதவையும் விட்டு விலகினார்

கர்த்தருடைய வார்த்தை மூன்று கூட்டத்தாருக்கு >> ஆசாரியர்கள்,இஸ்ரவேல் வம்சத்தார், ராஜாவின் வீட்டார்.

**கர்த்தருடைய கோபாக்கினையைப் பெற்றுக்கொண்டதன் காரணம் ::**

- ***நெறிதவறினவர்கள் (2)***
- ***சோரம்போனவன் (3)***
- ***கிரியைகளை சீர்திருத்தும் எண்ணமில்லாதவர்கள் (4)***
- ***உள்ளத்தில் வேசித்தன ஆவி (4)***
- ***அகந்தை (5)***
- ***இடறிவிழுவதற்கேதுவாக அக்கிரமம் (5)***
- ***பலிகளினால் கர்த்தரைத் தேடுதல் (6)***
- ***அந்நியரோடு கலந்து கர்த்தருக்கு துரோகம் (7)***
- ***தகாத கற்பனையை மனதாரபின்பற்றின காரியம்*** (11) (தாணிலும்,பெத்தேலிலும் பொன் கன்றுகுட்டிகள்)

**தண்டனை ::**

- ***கர்த்தர் அவர்களை விட்டு விலகினார் (6)***
- ***கர்த்தர் ஒருவரும்( அசீரிய ராஜா யாரேபிடம் உதவி பெற திட்டம்) அவர்களைத் தப்புவிக்கக்கூடதபடி எப்பிராயீமுக்கு சிங்கம் , யூதாவுக்கு பாலசிங்கம் (14)***

***தங்கள் குற்றங்களை உணர்ந்து , என் முகத்தை தேடுமட்டும் நான் என் ஸ்நானத்துக்குத் திரும்பிப் போய்விடுவேன். ..(15)***

Sword of the Spirit

# அதி. 6 >> கர்த்தரே நம்மை குணமாக்குவார்

1 - 3 >> குற்றங்களை உணர்ந்து மனந்திரும்புகிற ஒரு கூட்டம்.

அவர் நம்மை உயிர்ப்பிப்பார்,எழுப்புவார்,அவருடைய சமூகத்தில் பிழைத்திருப்போம் (2).
அப்பொழுது நாம் அறிவடைந்து ,கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்.(3)

4 - 10 >> எப்பிராயீமின் பாவம்

- ஒழிந்து போகிற பக்தி
  விளைவு::
  - தீர்க்கதரிசிகளைக் கொண்டு வெட்டினேன்
  - என் வாய்மொழிகளைக் கொண்டு அதம்பண்ணினேன்
  - தண்டனைகள் (அனைவரும் காணும்படி) வெளிச்சத்தைப் போல் வெளிப்படும்
- உடன்படிக்கையை மீறி துரோகம்
- அக்கிரமம் - கொலை,கொள்ளை
- பயங்கரமான காரியம் , தீட்டு - (ஆவிக்குறிய ) வேசித்தனம்

11 >> யூதாவும் இடறிவிழுவதினிமித்தம் அதற்கும் ஒரு அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது

# அதி. 7 >> திரும்புகிறார்கள் , ஆனாலும் உன்னதமானவரிடத்திற்கு அல்ல

*அவர்கள் பொல்லாப்பையெல்லாம் நான் நினைவில் வைத்திருக்கிறேன் என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சிந்திக்கிறதில்லை; இப்போதும் அவர்களுடைய கிரியைகள் அவர்களைச் சூழ்ந்துகொண்டது; அவைகள் என் முகத்துக்கு முன் இருக்கிறது.(2)*

*ராஜாக்கள்,அதிபதிகள்,ஜனங்கள் -விபச்சாரக் கள்ளர்-பொய்,பொல்லாப்பு -அதில் சந்தோஷம் (3)*

- *அப்பஞ்சுடுகிறவன்* - இஸ்ரவேல் ; *அடுப்பு* - அவர்களின் இருதயம் (4,6)
- *மாவைப் பிசைந்தது முதல் அது உப்பிப் போகுமட்டும் அனலை மூட்டாமல் இருக்கிறான்.* இஸ்ரவேலின் கடைசி 6 ராஜாக்களில் நான்கு பேர் ,பொல்லாதவர்களின் தந்திரங்களால் கொல்லப்பட்டார்கள்.அவர்களின் இருதயம் பொல்லாங்கினால் நிறைந்து , தங்கள் காலத்திற்காக ஆயத்தமாகி , நேரம் வாய்த்த போது அக்கினியாய் எரிந்தது (6) . ஆனாலும் அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் யாரும் தேவனைத் தேடவில்லை.

- ➢ *அவர்களில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறவன் ஒருவனும் இல்லை (7)(10)*
- ➢ *எனக்கு விரோதமாய் இரண்டகம் பண்ணினார்கள்,பொய் பேசுகிறார்கள் ,பொல்லாப்பு நினைக்கிறார்கள்(13)(15)*
- ➢ *தங்கள் இருதயத்தில் என்னை நோக்கிக் கூப்பிடுகிறதில்லை, என்னை வெறுத்து விடுகிறார்கள் (14)*

*எப்பிராயீம் - திருப்பிப் போடாத அப்பம்* >> அந்நியஜனங்கலோடே கலந்திருக்கிறான்

- *பேதையான புறா* >> எதிரிகளைச் சார்ந்து ,சகாயத்தை நாடினார்கள்

# அதி. 8 >> இஸ்ரவேலர் நன்மையை வெறுத்தார்கள்

*என் உடன்படிக்கையை மீறி,என் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாக துரோகம் பண்ணினபடியால், கர்த்தருடைய வீட்டின் மேல் சத்துரு* (அசீரியன் உபா:28:50) *கழுகைப்போல பறந்து வருகிறான்.(1)*

**துரோகம் ::**

- *தேவனை அறிந்திருக்கிறோம் என்று சொல்லியும், நன்மையை* (தேவனை)*வெறுத்தார்கள் .(2,3)*
- தேவனுடைய சித்தமில்லாமல் *ராஜாக்களை ஏற்படுத்திக் கொண்டார்கள்.(4)*
- *வெள்ளியினாலும்,பொன்னினாலும் ,தங்களுக்கு விக்கிரகங்களைச் செய்வித்தார்கள்.(4)*
- *நேசரைக் கூலிக்குப் பொருத்திக் கொண்டார்கள். (10)* (பிற ஜாதிகளைச் சார்ந்து ,தேவனை விட்டு தூரம் போனார்கள் )
- *பாவஞ்செய்வதற்கேதுவாக பலிபீடங்களைப் பெருகப்பண்ணினார்கள்.(11)*
- *வேதத்தின் மகத்துவங்களை அந்நியகாரியமாக எண்ணினார்கள்.(12)*
- *கர்த்தருக்கென்று செலுத்தும் பலிகளின் மாம்சத்தை பலியிட்டுப் புசிக்கிறார்கள்.(13)*
- *தங்களை உண்டாக்கினவரை மறந்தார்கள்.(14)*

**நியாயத்தீர்ப்பு ::**

- *சத்துரு அவர்களைத் தொடருவான்.(3)*
- *விளைச்சல் அவர்களுக்கு இல்லை.(7)*
- *புறஜாதிகளுக்குள்ளே விரும்பப்படாத பாத்திரத்தைப்போல் இருப்பார்கள்.(8)*
- *நகரங்களில் அக்கினியை வரப்பண்ணுவேன்.......கோவில்களைப் பட்சிக்கும்.(14)*

Sword of the Spirit

# அதிகாரங்கள்
# (9,10)
# தேவன் நீதியுள்ளவர்

Sword of the Spirit

# அதி. 9 >> நான் அவர்களை விட்டுப் போகையில் அவர்களுக்கு ஐயோ!!

## நீதி சரிகட்டும் நாட்கள் வரக் காரணம்::

- *உன் தேவனை விட்டு சோரம்போனாய்.(1)*
- *தீர்க்கதரிசிகள மூடரும், ஆவியைப் பெற்ற மனுஷர்கள் பித்தங் கொண்டவர்களுமாயிருக்கிறார்கள்.(7)*
- *கிபியாவின் நாட்களில் நடந்தது போல தங்களை மிகவும் கெடுத்துக் கொண்டார்கள்.(9) ( நியாயா 19:22 - 25 )*
- *பாகால் பேயோருக்குப் போய் ... அருவருப்புள்ளவர்களானார்கள்.(10)*

## கர்த்தருடைய நீதி சரிகட்டுதல் ::

- *கர்த்தருடைய தேசத்தில் குடியிருப்பதில்லை.(3)*
- *பலிகள் கர்த்தருடைய ஆலயத்தில் வருவதில்லை.(4)*
- *வாசஸ்தலங்களில் முட்செடிகள் முளைக்கும்.(6)*
- *எப்பிராயீமின் மகிமை ஒரு பறவையைப் போல பறந்து போம்.(11)*
- *பிள்ளைகளற்றவர்களாவார்கள்.(12)*
- *அந்நிய ஜாதிகளுக்குள்ளெ அலைந்து திரிவார்கள்.(17)*
- *கர்த்தர் :*
  - *நான் அவர்களை வெறுத்தேன்.*
  - *என் சமூகத்தை விட்டுத் துரத்துவேன்.*
  - *இனி அவர்களை நேசிக்கமாட்டேன்.(15)*

Fruit of the Spirit

# அதி.10 >> நாம் கர்த்தருக்கு பயப்படாமற்போனபடியால் நமக்கு ராஜா இல்லை

***இரண்டு வித பாவங்களினிமித்தம் கட்டப்படும்போது,ஜனங்கள் அவர்களுக்கு விரோதமாய்க் கூடுவார்கள்*** .(கர்த்தரைத் தங்கள் தேவனென்றும், தங்கள் ராஜா என்றும் ஏற்றுக் கொள்ளாத பாவம்)

இஸ்ரவேலர்கள் தேவனுடைய வீடு என்று அழைக்கப்பட்ட பெத்தேலை ,விக்கிரக வழிபாட்டிற்கான ஸ்தலங்களாக மாற்றினார்கள்.தேசம் யெரோபெயாம் (II) - இன் ஆரம்ப காலத்தில் செழிப்பினால் நிறைந்த போது ,தேவனைத் தேடாமல் விக்கிரகங்களுக்கு பலிபீடங்களைத் திரளாக்கினார்கள்.எனவே தேவன் நீதியைச் சரிகட்டினார்.

- ***சிலைகளை நாசமாக்குவார்.***
- ***ராஜா இருந்தாலும் நமக்காக என்ன செய்வான்*** என்று ஜனங்கள் சொல்லத்தக்கதாக, ராஜாக்கள் ஒவ்வொருவரும் தங்கள் ராஜ்யபாரத்தை தக்கவைத்துக் கொள்வதிலேயே தீவிரமாய் இருந்தார்கள்.
- ***எப்பிராயீம் இலச்சையடைவான்.இஸ்ரவேல் தன் ஆலோசனையினால் வெட்கப்படுவான்.***
- ***நான் எப்பிராயீமின் கழுத்தில் நுகத்தடியை வைப்பேன்.***(அசீரியா), ***யூதா உழுவான்*** (பாபிலோன்).
- ***உங்கள் எல்லா அரண்களும் அழிக்கப்படும்.*** (722 கி.மு அசீரியா ராஜா - சல்மனாசார்)
- ***அதிகாலமே இஸ்ரவேலின் ராஜா*** (கடைசி ராஜா - ஓசெயா) ***சங்கரிக்கப்படுவான்.***

★ **நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது.(12)**

Sword of the Spirit

# அதிகாரங்கள்
(11 - 14)

# தேவன் அன்பானவர்

Sword of the Spirit

# அதி.11 >> அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன்

**கர்த்தர் ::**

- ➢ *இளைஞனாயிருந்த போது நான் இஸ்ரவேலை நேசித்தேன். (1)*
- ➢ *எப்பிராயீமை கைப்பிடித்து நடக்கப் பழகினேன்.(3)*
- ➢ *அவர்கள் பட்சம் சாய்ந்து, அவர்களுக்கு ஆகாரங்கொடுத்தேன்.(4)*

**இஸ்ரவேல் ::**

- ➢ *அழைக்கிறவர்களின்(கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கிற தீர்க்கதரிசிகளின்) முகத்திற்கு விலகிப் போய்விட்டார்கள்.(2)*
- ➢ *தங்களை குணமாக்கினவர் கர்த்தர் என்று அறியாமற் போனார்கள்.(2)*
- ➢ *கர்த்தரை விட்டு விலகுகிற மாறுபாட்டைப் பற்றிக் கொண்டிருக்கிறார்கள்.(7)*

**தேவனின் அன்பு ::**

- ❖ *எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப்போலாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப்போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது. (8)*
- ❖ *என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன்; எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன்; ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன்; நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர்; ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாக வரேன்.(9)*

**ஆயிரம் வருட அரசாட்சி ::**

- ➢ *கர்த்தர் சிங்கத்தைப் போல கெர்ச்சிப்பார்.(10)*
- ➢ *கர்த்தரைப் பின்பற்றுவார்கள்.(10)*

# அதி.12 >> தீர்க்கதரிசியினால் காக்கப்பட்டான்

## யாக்கோபின் வரலாறு ::

- *யாக்கோபு கர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிகாலைப் பிடித்தான்.(3)*
- *தன் பெலத்தினால் தேவனோடே போராடினான்.(3)*
- *பெத்தேலிலே கர்த்தர் அவனைக் கண்டு,சந்தித்தார்.(4)...யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம்.(5)*
- *சீரியா தேசத்துக்கு ஓடிப்போய் ,ஒரு பெண்ணுக்காக ஊழியஞ்செய்து,ஒரு பெண்ணுக்காக ஆடு மேய்த்தான்.(12)*
- *கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியைக் கொண்டு இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார்.(13)*
- *எப்பிராயீம்: நான் ஐசுவரியவானானேன்; நான் பொருளைச் சம்பாதித்தேன்; நான் பிரயாசப்பட்டுத் தேடின எல்லாவற்றிலும் பாவமாகிய அக்கிரமம் என்னிடத்தில் கண்டுபிடிக்கப்படுவதில்லையென்று சொல்லுகிறான்.(8)(14)*
- *யூதாவோடும் கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; ...(2)*

## தேவனின் அழைப்பு ::

- *இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு; தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு, இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு.(6)*

# அதி.13 >> என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு

எப்பிராயீம் ,யாக்கோபின் வலது கையினால் ஆசீர்வாதத்தைப் பெற்று ,செழித்து,
*1. இஸ்ரவேலிலே மேன்மைப் பெற்றான்.பாகால் விஷயத்தில் குற்றஞ்செய்து மடிந்து போனான்.(1)*

***ஆகையால் அவர்கள் காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் ஒழிந்துபோகிற பனியைப்போலவும், பெருங்காற்று களத்திலிருந்து பறக்கடிக்கிற பதரைப்போலவும், புகைக்கூண்டில் ஏறிப்போகிற புகையைப்போலவும் இருப்பார்கள்.(3)***

*2. தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள்; திருப்தியானபின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று; அதினால் என்னை மறந்தார்கள்.(6)*

***ஆகையால் நான் அவர்களுக்குச் சிங்கத்தைப்போல் இருப்பேன்; சிவிங்கியைப்போல் வழியருகே பதிவிருப்பேன்.(7).***

*3. எப்பிராயீமின் அக்கிரமம் கட்டிவைத்திருக்கிறது; அவன் பாவம் பத்திரப்படுத்தப் பட்டிருக்கிறது.(12). இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக்கொண்டாய்;*

***ஆனாலும் என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு.(9)***
***அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே?(14)*** *…(1 கொரி 15:55 )*

# அதி.14 >> அவர்களை மனப்பூர்வமாய் சிநேகிப்பேன்

இஸ்ரேல் மீதான தேவனுடைய மாறாத அன்பு , அவர் குறித்த காலத்தில் தேசத்தின் மனந்திரும்புதலையும் , மீட்டெடுப்பையும் கொண்டு வரும்.

**ஜனங்கள் செய்ய வேண்டிய காரியம் ::**

➢ ***தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டும்.(1)***

***திக்கற்றவன் உம்மிடத்தில் இரக்கம் பெறுகிறான்.(3)***

கர்த்தரையன்றி இரட்சகர் ஒருவருமில்லை .எனவே உலகத்தாரை சார்ந்திருத்தல் வேண்டாம்.

**கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் ::**

★ ***நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்; லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான்.(5)***

★ ***அவன் கிளைகள் ஓங்கிப் படரும், அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப்போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப்போலவும் இருக்கும்.(6)***

★ ***அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள்; தானிய விளைச்சலைப்போலச் செழித்து, திராட்சச்செடிகளைப்போலப் படருவார்கள்; அவன் வாசனை லீபனோனுடைய திராட்சரசத்தின் வாசனையைப்போல இருக்கும்.(7)***

Spirit of the Spirit

Sword of the Spirit

கர்த்தர்:
நான் பச்சையான தேவதாரு விருட்சம் போலிருக்கிறேன்; என்னாலே உன் கனியுண்டாயிற்று

Sword of the Spirit

Sword of the Spirit

இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்.

Sword of the Spirit

தேவனுக்கே
மகிமை

ஆமென்

Sword of the Spirit